Sl. No. 01015088

**DELD**

# 2012

# LAW — PAPER IV

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions )

நேரம் : 3 மணி ]
Duration : 3 Hours ]

[ மொத்த மதிப்பெண்கள் : 100
[ Maximum Marks : 100

அறிவுரைகள் / Instructions

( கீழ்க்கண்ட அறிவுரைகளை மீறும் விண்ணப்பதாரர்கள் தண்டிக்கப்படுவார்கள் )
( Candidates will be penalized for failure to comply with the following instructions )

1. இது ஒரு வினா-விடைத்தாள் தொகுப்பு ஆகும் மேலும் இதனுடன் OMR தாள் இணைக்கப்பட்டுள்ளது. OMR தாளை வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து தனியாக பிரிக்கக்கூடாது. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் விடையளிப்பதற்கென கொடுக்கப்பட்ட இடத்திலேயே விடையளிக்க வேண்டும்.

   This is a question cum answer booklet having OMR sheet attached. Do not detach the OMR sheet from the question cum answer booklet. Space for each question is provided against each question. The candidate has to answer the question in the space provided.



https://sarkarirecruitment.com/

2. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவெண்களை வினா-விடைத்தாள் தொகுப்புட இணைக்கப்பட்டுள்ள OMR தாளில் அதற்கென வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தவி, ( வினாவிடைத்தாள் தொகுப்பு, வரைகட்டத்தாள், நிலப்படம் அல்லது சஞ்சிகைத் தாள்கள் உட்பட ) வேறு எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களின் வினா-விடைத்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

   Candidates should not write their Register Numbers anywhere ( including question cum answer booklet, graph sheets, maps or in the journal sheets supplied to them ) except in the place provided on the OMR sheet attached with the question cum answer booklet. The question cum answer booklet of the candidate, who violates this instruction, will be invalidated.

3. விண்ணப்பதாரர் பதிவு எண்களைத் தவறாக எழுதினால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். பதிவு எண்ணுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பதிவு எண்ணை எழுதாமல் விட்டுவிட்டாலும் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும்.

   A reduction of *one* mark will be made for writing register number incorrectly. A reduction of *one* mark will be made for the omission to write the register number in the space provided for it.

4. விண்ணப்பதாரர்கள் எந்தவொரு பயன்பாட்டிற்கும் அதாவது விடையளித்தல், வரைதல், அடிக்கோடிடல், சிறப்புப்படுத்திக் காட்டுதல் ( Highlighting ) உள்ளிட்டவற்றிற்கும், நீலம் அல்லது கருப்பு அல்லது கருநீலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரே ஒரு நிற மையைக் கொண்ட மையூற்று எழுதுகோல் அல்லது பந்துமுனை எழுதுகோல் ( Fountain Pen or Ball Point Pen ) மட்டுமே வினா-விடைத்தாள் தொகுப்பு முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

   Candidates should use only pen ( Fountain pen or Ball point pen ) with only any one of the three coloured inks viz., Blue or Black (or) Blue Black for all the purposes including answering, drawing, underlining, highlighting etc., in the entire question cum answer booklet.



https://sarkarirecruitment.com/

5. எந்த ஒரு பயன்பாட்டிற்கும் வரைகோல் ( Sketch pen ) அல்லது பென்சில் அல்லது வேறு எந்த எழுது கருவிகளையும் ( Writing devices ) உபயோகிக்கக்கூடாது. இந்த அறிவுரையை மீறுவோரின் வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

Candidates should not use sketch pens, pencils or any other writing devices for any purpose. The question cum answer booklets of the candidates, who violate this instruction, will be invalidated.

6. வினாக்களுக்கு விண்ணப்பதாரர்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்கலாம். ஒரு பகுதி தமிழிலும் மறு பகுதி ஆங்கிலத்திலும் கூட விடையளிக்கலாம்.

Candidates have the option to answer the questions either in English or in Tamil. They are permitted to write even partly in English or partly in Tamil.

7. விண்ணப்பதாரர்கள் விடை அளிக்கும் போது ஆணை, தீர்ப்பு அல்லது கடிதம் முதலியவற்றிற்கும் கூட வினாவில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே எழுத வேண்டும்.

While answering order, judgements or letter writing questions, candidates should use only the names and/or address given in the question.

8. விண்ணப்பதாரர்கள் தங்களது வினா-விடைத்தொகுப்பு வினாக்களில், குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரி தவிர வேறு பெயர் அல்லது சுருக்கொப்பம் அல்லது முகவரி எழுதி இருந்தாலும் அல்லது விண்ணப்பதாரர் தனது பெயரையோ அல்லது தனது சுருக்கொப்பத்தையோ விடைத்தாளின் எந்த இடத்தில் எழுதியிருந்தாலும் அவர்களது வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

The question cum answer booklet of the candidate will also be invalidated for writing candidate's name or initial anywhere in the question cum answer booklet or writing any other name or initial or address in the question cum answer booklet, other than given in the question.



https://sarkarirecruitment.com/

9. விண்ணப்பதாரர் தங்களது வினா-விடைத்தாள்தொகுப்பில் சம்பந்தமற்ற பொருத்தமற்ற குறிப்புகளை எழுதவோ அல்லது முறையீடு செய்யவோ அல்லது விண்ணப்பதாரரின் அடையாளத்தை குறிக்கும் வகையில் குறியீடு செய்யவோ அல்லது அதிக மதிப்பெண் அளிக்கக் கோரி தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் முறையீடு செய்யவோ கூடாது. மீறினால் அவர் அந்த பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவராக்கப்படுவார்.

Candidates should not write irrelevant or impertinent remarks or any appeal or any marks revealing identity of the candidates or irrelevant matter including an appeal or invoking sympathy of the examiner for higher marks in the question cum answer booklet. The candidates who violate these instructions will be disqualified for that recruitment.

10. விண்ணப்பதாரர்கள் மற்றவர்களைப் பார்த்து எழுதுவது, மற்றவர்களுக்குத் தெரிவிப்பது, தேர்வுக்கூட கண்காணிப்பாளர் அல்லது மற்றவர்கள் உதவியை நாடுவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. நுழைவுக் குறிப்பாணையிலும் கண்டிப்பாக எதுவும் எழுதக்கூடாது. மேலும் செல்லிடப்பேசி (செல்லுலர் போன்) அகவி (பேஜர்) துணுக்குகள் அல்லது துண்டுக் காகிதங்கள் ஆகிய எவற்றையும் தேர்வுக் கூடத்திற்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை.

Candidates are also prohibited from communicating or copying from one another or seeking the help of an invigilator or any outsider. Candidates are also strictly prohibited from writing anything on the memorandum of admission. They are also prohibited from carrying the cellular phone, pager, scrap or rough paper into the examination hall.

11. தங்கள் வினா-விடைத்தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்து விடக்கூடாது.

Do not tear off any leaves from your question cum answer booklet.

12. தேர்வுக்கூடத்தை விட்டு வெளியில் செல்வதற்கு முன்பாக தங்கள் வினா விடைத்தாள் தொகுப்பு மற்றும் OMR தாளை கண்காணிப்பாளரிடம் நேரில் ஒப்படைத்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

Do hand over your question cum answer booklet and OMR sheet personally to the invigilator before leaving the examination hall.



https://sarkarirecruitment.com/

ணப்பதாரா்களுக்கான அறிவுரைகள் :

i) பகுதி 'அ' விலிருந்து 10 வினாக்களுக்கும், பகுதி 'ஆ' விலிருந்து 10 வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 5 மதிப்பெண்கள். ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

*ctions to the Candidates :*

i) Answer 10 questions from **Part – A** and 10 questions from **Part – B**.

ii) Each question carries 5 marks. Answer the questions in not more than 100 words each.

## பகுதி - அ / PART – A
## ( மைய அரசு சட்டங்கள் ) / ( CENTRAL ACTS )

( மதிப்பெண்கள் / Marks : 10 × 5 = 50)

| | |
|---|---|
| 1 | 1959 ஆம் ஆண்டின் ஆயுத சட்டத்தின் கீழ் ஆயுதம் ஒன்றினை தன் வசம் வைத்துக் கொள்ள அனுமதி பெற வேண்டியதற்கான நடைமுறைகள் யாவை ?<br>What are the procedures to obtain a licence for possession of arms under the Arms Act, 1959 ? |

| | |
|---|---|
| 2 | 1958 ஆம் ஆண்டின் நன்னடத்தைக் கண்காணிப்பு சட்டத்தின் கீழ் ஒரு நபர் நன்னடத்தையின் பேரில் பிணையக் கட்டுப்பாடுகளில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் அந்தக் கட்டுப்பாடுகளின் படி நடக்கவில்லை என்ற நிலையில் அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உண்டான செயல்முறைகள் யாவை ?<br>What are the procedures to be followed when a person released on probation failed to observe conditions of bond under the Probation of Offenders Act, 1958 ? |

| | |
|---|---|
| 3. | கம்பி வழித் தொலைக்காட்சி ( ஒழுங்குமுறை ) சட்டம் 1995 ன் படி, உபகரணங்களை பறிமுதல் செய்வது குறித்த மத்திய அரசின் அதிகாரங்கள் யாவை ?<br>What are the powers of the Central Government as to confiscation of equipment under the Cable Television Network Regulating Act, 1995 ? |

https://sarkarirecruitment.com/

4. வரதட்சணை தடைச் சட்டம், 1961 ன் கீழ் செய்யும் குற்றங்களை நீதிமன்றம் கவனத்தில் கொள்வதற்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற வகையங்களைப் பகுப்பாய்வு செய்க.

Analyse the provisions in respect of cognizance of offences under the Dowry Prohibition Act, 1961.

5. 'சிறார்' என்ற வார்த்தை சிறார் மணத் தடுப்புச் சட்டம், 1929 ன் கீழ் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் அந்தச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியவர்கள் யார் என்பது பற்றி கூறுக.

Define the term 'child' as dealt in the Child Marriage Restraint Act, 1929. Who are all liable to be punished under the said Act ?



6. இன்றியமையா பொருட்கள் சட்டம் 1955 ன் கீழ் 'நிறுவனங்கள்' குற்றம் புரிந்திருக்கையில் அவைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளை விவரி.

State the procedure to be followed when an offence is committed by companies under the Essential Commodities Act, 1955.



7. காப்புரிமை சட்டம் 1957 ன் படி 'காப்புரிமைக் குழு' என்பதனை வரையறுக்கவும். மேலும் குழுவின் அதிகாரம் மற்றும் செயல்முறை குறித்து விளக்குக.

Define 'Copyright Board' and state their powers and functions under the Copyrights Act, 1957.



8. புகைவண்டி இலாகா சொத்துக்கள் என்பது என்ன ? மற்றும் அவற்றை சட்டவிரோத ஆக்கிரமிப்புபடுத்தினால் என்ன தண்டனை வழங்கப்படும் என்பது குறித்து புகைவண்டி இலாகா சொத்து சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு சட்டம் 1966 கீழ் விவரிக்கவும்.

What is 'Railway property' ? State the penalties for unlawful possession of Railway property under the 'Railway Property Unlawful Possession Act, 1966.

https://sarkarirecruitment.com/

9 வரையறுக்கப்பட்ட வெடிபொருட்களில் சிலவற்றை குறிப்பிடவும். வெடி பொருட்கள் சட்டம், 1884 சட்டப்படி விதிமீறல்களுக்கான தண்டனைகள் யாவை ?

Name some of the defined explosives under the Explosives Act, 1884 and state the punishments for the contraventions under the said Act.

**DELD**

10 இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள தனி நீதிமன்றத்தின் அதிகாரங்களை விவாதிக்க.

Discuss the powers of the special court constituted under the Essential Commodities Act, 1955.

11. சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட இளஞ்சிறார்களுக்கு இளஞ்சிறார் நீதி ஆயம் வழங்கும் பல்வேறு ஆணைகள் குறித்து இளஞ்சிறார் நீதி ( கவனம் மற்றும் பாதுகாப்பு ) சட்டம் 2000 குறிப்பிட்டுள்ளவை யாவை ?

Examine the various types of orders that may be passed by the Juvenile Justice Board regarding Juvenile in conflict with law under the Juvenile Justice ( Care and Protection ) Child Act, 2000.

12 1954 ஆம் ஆண்டின் உணவு கலப்படத் தடைச் சட்டத்திற் கீழான ஒரு குற்றத்தில் 'நன் நம்பிக்கை' எவ்வாறு தொடர்புள்ளதாக இருக்கிறது ?

How 'good faith' is related to an offence under Prevention of Food Adulteration Act, 1954 ?

பகுதி – ஆ / Part – B

(மாநில சட்டங்கள்) / ( STATE ACTS )

(மதிப்பெண்கள் / Marks : 10 x 5 = 50)

1 பிரிவு 75 ல் மாநகர காவல் சட்டத்தில், 1888 குறிப்பிட்டுள்ள குற்றத்தின் இயல்பு பற்றியும், அது சம்பந்தப்பட்ட நடைமுறை விதிகளில் ஏற்பட்டுள்ள இன்றைய மாற்றங்கள் பற்றியும் விவரிக்க.

Write down the nature of the offence under Section 75 of the City Police Act, 1888 and the recent development in the procedural law relating to the same.

2 'பகடிவதை' என்பதை வரையறுக்கவும். ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு இது சம்பந்தமான அதிகாரங்கள் யாவை என்பதனை தமிழ்நாடு பகடிவதை தடுப்புச் சட்டம் 1997 கீழ் எடுத்துரைக்கவும்.

Define 'ragging' and state what are the powers of the head of the institution under the Tamil Nadu Prohibition of Ragging Act, 1997.

https://sarkarirecruitment.com/

| | |
|---|---|
| 3. | தமிழ்நாடு பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம் 1998 ல் 'பெண்களுக்கு தொல்லை செய்தல்' என்ற வார்த்தைகள் 'கேலி செய்தல் என்ற வார்த்தைக்கு' பதிலாக எப்போது மாற்றி அமைக்கப்பட்டன. மேலும் பிரிவு 4-ல் குறிப்பிட்டுள்ள குற்றத்தை வழக்குகளுடன் விவரிக்க. When were the words 'harassment of women' substituted by omitting the term 'eve teasing' in Tamil Nadu Prohibition of Harassment of Women Act, 1998 ? Examine the nature of the offence under Section 4 of the said Act with case laws. |

4. தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் 1930 குறிப்பிட்டுள்ள படி ஒரு நீதித்துறை நடுவருக்குரிய அதிகாரங்கள் யாவை ?
Explain the powers of Judicial Magistrate mentioned in Tamil Nadu Gaming Act, 1930.

| | |
|---|---|
| 5. | தமிழ்நாடு சொத்து ( சேதம் & இழப்பைத் தடுத்தல் ) சட்டம் 1992 ன் கீழ் 'பொது சொத்து' என்பதை வரையறுக்கவும். இந்த சட்டப்படி பொது சொத்து யார் வசம் இருந்தால் சட்டரீதியான உடமையாகக் கருதப்படும் ? அச்சொத்துக்களின் இழப்புக்கும் சேதத்திற்கும் யார் பொறுப்பு என்றும் விளக்குக. Define 'Public Property' under the Tamil Nadu Public Property ( Prevention of Damage and Loss ) Act, 1992. List out the lawful possession of such property by persons and state who are liable for the damage and loss caused to such properties. |

| | | |
|---|---|---|
| 9. | 6. | தடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் என்ன என்பதனை தமிழ்நாடு திறந்த வெளி இடங்கள் அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல் சட்டம் 1958 கீழ் வரையறுக்க. Define 'objectionable advertisements' under the Tamil Nadu Open Places ( Prevention of Disfigurement ) Act, 1958. |

**D**

| | |
|---|---|
| 7. | தமிழ்நாடு ( நிதி நிறுவனங்களில் ) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு விதிகள் 1997 கீழ் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்குரிய தேவைகள் யாவை ? What are the requirements to attach properties under the Tamil Nadu Protection of Interests of Depositors ( in Financial Establishments ) Act, 1997 ? |

**DELD**

| | | |
|---|---|---|
| | 8. | தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் ( தடை ) சட்டம், 1979 ன் கீழ் 'பரிசுத்திட்டம்' என்பதை வரையறுத்து அச்சட்டத்திலுள்ள தண்டனை பிரிவுகளை கூறுக. Explain the term 'prize scheme' as defined under the Tamil Nadu Prize Schemes ( Prohibition ) Act, 1979 and its penal provisions. |
| 9. | 9. | 'வரம்பிகந்த வட்டி' என்பதை விளக்கி மற்றும் தமிழ்நாடு வரம்பிகந்த வட்டி விதிப்பு தடுப்புச் சட்டம் 2003 அதை தடுக்க விதித்துள்ள தண்டனையை கூறுக. Define the term 'Exorbitant Interest' and state the penalty imposed under the Tamil Nadu Prohibition of Charging Exorbitant Interest Act, 2003. |

https://sarkarirecruitment.com/

10. தமிழ்நாடு வனச் சட்டம் 1882 ன் கீழ் 'வரையறுக்கப்பட்ட வனப் பொருட்கள்' என்பவை யாவை ? அதில் எடுத்துச் செல்லல், 'வசம் வைத்திருத்தல்' என்பவற்றிற்கு தடை செய்யப்பட்டுள்ள பொருட்கள் யாவை ?

What are the defined forest produce under the Tamil Nadu Forest Act, 1882 ? State which are banned from possession and transport.

11. தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்புக் கோவைகளின் மூலமாகத் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் ( முறைப்படுத்தல் ) சட்டம் 1984 கீழ் யாரெல்லாம் கட்டுப்பட்டவர்கள் என்பதை விவரிக்க.

State the persons who are governed under the Tamil Nadu Exhibition of Films on Televison Screen through Video Cassette Recorders and through Cable Televison Network ( Regulation ) Act, 1984.

12. தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 ன் கீழ் ஆயுள் தண்டனை வழங்கத் தக்க குற்றத்தினை பற்றியும் அதற்கான வழக்கு விசாரனை நடைமுறை பற்றியும் விளக்குக.

Elucidate the offence under the Tamil Nadu Prohibition Act, 1937 which provides for life imprisonment and the procedure in conducting the prosecution of the offence.

https://sarkarirecruitment.com/